1970 செப்டம்பர் 9]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தீவிரமாகவும், துரிதமாகவும் அந்த மனுவைப் பைசல் செய்ய வேண்டும். வழக்கு முடியவேண்டும். ஒரு மாதத்திற்குப் பிறகு கேட்டால் விவரம் தருகிறோம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அப்போது சட்டசபையைக் கூட்டுங்கள், கேட்டுக்கொள்கிறோம்.

Memorandum from Parry's Employees' Union, Ranipet.

*339 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state whether a memorandum, dated 18th March 1970 has been received from the Parry's Employees' Union, Ranipet, regarding the declaration of National Holidays?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அந்த மனு 16—3—1970-ம் தேதியிட்டதாகும். உறுப்பினர் அவர்கள் கூறுகிற மாதிரி 18-ம் தேதியிட்டது அல்ல.

Dr. H. V. HANDE : May I know from the Hon. Minister the details?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, ராணிப்பேட்டையிலுள்ள பாரி கம்பெனி தொழிலாளர் சங்கம் இரண்டு கோரிக்கைகளை மனுவில் குறிப்பிட்டிருக்கிறது. முதல் கோரிக்கை என்னவென்றால், தற்போதைய விடுமுறையுடன் கூடுதலான விடுமுறையாக 'மே தினத்தை' விடுமுறையாக அளிக்கவேண்டும். மற்றொரு கோரிக்கை என்னவென்றால், தேசிய விடுமுறை, விடுமுறை நாட்களில் வருமானால் அதற்குப் பதிலாக மற்றொரு நாள் கட்டாயமாக விடுமுறை அளிக்க தகுந்த முறையில் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதாகும்.

Dr. H. V. HANDE : May I know whether it is a fact that they made a request that when 'May Day' is declared a holiday it erodes into other Hindu Festivals? When these holidays like Gandhiji's birth day, etc., are given they are National Holidays. But when holiday for 'May Day' is given, the other Hindu Festival holidays are reduced. If so, will the Government see that this holiday for 'May Day' does not affect other Hindu Festival holidays which these labourers are already enjoying?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் திருத்தம் வேண்டும்பொழுது தெளிவாகச் செய்யலாம். இப்போது தமிழ் நாட்டிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு ஒன்பது நாட்கள் கட்டாயம் விடுமுறை விடப்படுகிறது. அதில் நான்கு நாட்கள் தேசிய விடுமுறை, ஐந்து நாட்கள் பண்டிகைவிடுமுறை நாட்களாகும். இந்தப் பண்டிகை நாட்கள் ஐந்து எவை எவை இருக்கவேண்டுமென்பதைக் குறித்து, தொழிற் சங்கத் தலைவர்களும், தொழிலதிபர்களும் கூடிப் பேசி முடிவு செய்து கொள்ளலாம் என்று சட்டம் சொல்கிறது. இப்போது பல்வேறு தொழிற் சாலைகளிலே இந்த முறையில் நல்ல முடிவு கண்டு இருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒன்பது நாட்கள் விடுமுறை விடவில்லையானால், அப்பொழுது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.